**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| Miscellaneous | .. | .. | ) | |
| | | | ) | **Sessions Case No. 52/2023** |
| Preliminary Register | .. | .. | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW8** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | தங்கவேல் |
| Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர் இல்லை, 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **3rd day of February 2026.**

முதல் விசாரணை **:** நான் தற்போது ஆமத்துார் காவல்நிலையத்தில் சார்புஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2022 ம்

வருடம் இருக்கன்குடி காவல்நிலையத்தில் சார்புஆய்வாளராக பணியில் இருந்தபோது, 19.08.2022 ம் தேதி பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர் நன்றிஅறிவிப்பு செய்வதற்காக எங்கள் சரகத்திற்கு உட்பட்ட நென்மேனி கிராமத்திற்கு வந்தபோது, ஊராட்சி மன்ற தலைவியாக திருமதி வேலம்மாள் அவர்கள் அவரது கணவர் சக்திவேல் சேர்மனாகவும் இருந்துவந்தார். நன்றிஅறிவிப்பு செய்வதற்காக அமைச்சர் அவர்கள் ஊராட்சி மன்ற தலைவி வேலம்மாள் வீட்டின் அருகே வந்தபோது பொதுமக்கள் கூடினார்கள். அமைச்சர் வேலம்மாள் அவர்களிடம் உங்களுக்கு ஏதாவது குறை இருக்கிறதா என்று கேட்டார். அப்போது பெரியசாமி மனைவி செல்வி என்பவர் வேலம்மாளிடம் அவரது கணவர் வேலம்மாளை கூப்பிடுவதாக சொன்னார். வேலம்மாள் பெரியசாமி கூப்பிட்டதற்கு என்ன என்று போய் கேட்கவில்லை. அதை பெரியசாமி மனதில் வைத்துக்கொண்டு கடந்த 22.08.2022 ம் தேதி இரவு சுமார் 8.30 மணிக்க மது அருந்திவிட்டு வேலம்மாள் வீட்டில் வந்து பிரச்சினை செய்து அசிங்கமாக பேசி, பஞ்சாயத்து குடிநீர்குழாயை உடைத்து சேதப்படுத்திவிட்டார். அதை கண்டித்த தண்ணீர் ஆப்ரேட்டர் குருசாமி என்பவரை அடித்து தலையில் காயத்தை ஏற்படுத்தியுள்ளார். பின்னர் வேலம்மாளை கொலைமிரட்டல் விடுத்துள்ளார். மேற்படி சம்பவத்தை பார்த்த சுரேஷ், சக்திவேல் சத்தம் போடவும் மேற்படி பெரியசாமி அங்கிருந்த வேலம்மாளை தாக்கி இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொலைசெய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார். இரவு நேரம் என்பதனால் புகார் கொடுக்க வரவில்லை. மறுநாள் 23.08.2022 ம் தேதி

காலை 8 மணிக்கு அவருடைய மகன் கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 09/2022, பிரிவுகள் 294(b), 323, 324, 427, 506(ii)IPC r/w 4 TNWHA3(2) (a) TNPPDL Act ஆக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ**.**த**.**சா**.**ஆ**.8**. பின்னர் சம்பவஇடம் சென்று பார்வைமகஜர் தயார் செய்தேன். சம்பவஇடம் சாட்சிகள் மாரிமுத்து, சரவணன் ஆகியோர் முன்னிலையில் வரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்தேன். நான் தயார் செய்த வரைபடம் அ**.**த**.**சா**.**ஆ**.9.** பார்வைமகஜர் அ**.**த**.**சா**.**ஆ**.10**. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் இரும்பு தெருக்குழாய், நள்ளி ஒன்று ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ**.**த**.**சா**.**ஆ**.11**. சுமார் 59 செ.மீ நீளமுள்ள இரும்பு தெருக்குழாய் பைப் சா.பொ.1 ஆகவும், சுமார் 23.5 செ.மீ நீளமுள்ள இரும்பு தெருக்குழாய் பைப் சா.பொ.2 ஆகவும் சுமார் 8 செ.மீ இரும்பு நள்ளி ஒன்று சா.பொ.3 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் சுரேஷ், சக்திவேல், தமிழ்செல்வன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட குருசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். குருசாமிக்கு சிகிக்சை செய்த மருத்துவர் பாண்டீஸ்வரன் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்றிதழ் பெற்றேன். பின்னர் வழக்கு சொத்துக்களை நீதித்துறை நடுவர் II சாத்தூர் நீதிமன்றத்தில் படிவம் 95 மூலமாக ஒப்படைத்து PR.No 371/2022 ஆக எண் பெற்றேன். படிவம் 95 அ.த.சா.ஆ.12. பின்னர் பணிமாறுதல் சென்றதால்

வழக்குகோப்பை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் முதல்தகவல் அறிக்கை மறுநாள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான், 22.08.2022 இரவு சம்பவம் நடைபெற்றதால் மறுநாள் புகார் கொடுக்கப்பட்டது அதன் பிறகு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. ஒருவர் காயம்பட்டு மருத்துவ மனைக்கு சிகிக்சைக்காக செல்லும்போது அந்த மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்படுவது வழக்கம் என்றுசொன்னால் - சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட குருசாமி 22.08.2022 ம் தேதியே சிகிக்சைக்காக விருதுநகர் மருத்துவமனைக்கு சென்றார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் - ஆம், அது எனக்கு தெரியும். விருதுநகர் மருத்துவமனையிலிருந்து அவர் சிகிக்சைக்கு வந்த உடனேயே உங்களுக்கு தகவல் வந்த விவரம் இந்த வழக்கில் சொல்லப்படவில்லை என்றுசொன்னால் - சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள AR Copy குருசாமியுடையதில் தன்னை ரேசன் கடை அருகே கல் மற்றும் அரிவாளால் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றுசொன்னால் - சரிதான். உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.த.சா.ஆ.9 வரைபடத்தில் தெருக்குழாய் அமைந்துள்ளதாக குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றுசொன்னால் - சரிதான். அதேபோல் வேலம்மாள் வீட்டின் அருகே தெருக்குழாய் உடைந்ததாக காட்டப்படவில்லை என்றால் - சரிதான். அதேபோல் பொதுஇடத்தில் வைத்து என்னை அசிங்கமாக பேசினார் என்றுகுறிப்பிட்டு

சொல்லப்பட்டுள்ளதா என்றால் - ஆம். இவ்வழக்கில் சேதமதிப்பை குறிப்பிட்டு சொல்லும் சேதமதிப்பு சான்றிதழுடன் பிளம்பர் மற்றும் ஹார்டுவேர் கடையிலிருந்து பெறப்பட்ட பில்கள் ஏதும் இணைத்து இந்நீதிமன்றத்தில் வழக்கு ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் - சரிதான். இந்த வழக்கின் புகார்தாரரும், எதிரியும் வெவ்வேறு கட்சியை சேர்ந்தவர்கள் என்று உங்களது விசாரணையில் தெரியவந்ததா என்றால் - இல்லை. இந்த எதிரி அதே ஊராட்சி முன்னால் ஒன்றி கவுன்சிலர் என்ற விவரம் உங்களது விசாரணையில் தெரியவந்ததா என்றால் - ஆம். புகார்தாரரும், எதிரியும் வெவ்வேறு கட்சியை சேர்ந்தவர்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியும் என்றும் நீங்கள் வழக்கிற்காக அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் - சரியல்ல. அதேபோல் 19.08.2022 ம் தேதி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர் வெற்றிபெற்றதற்கு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வந்திருந்தார் என்று குறிப்பிடும் பட்சத்தில் எதிரி வேறு கட்சியை சேர்ந்தவர் என்பவதனால் அவரை சந்தித்திருக்கவே வாய்ப்பில்லை என்றுசொன்னால் - சரியல்ல. புகார்தாரர் சொல்லியுள்ளது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. எதிரி இந்த புகார்தாரரை அடிக்கவோ, அசிங்கமாக பேசவோ, கொலைமிரட்டல் செய்யவோ கிடையாது என்றால் - சரியல்ல. புகார்தாரரின் வீட்டின்முன் தெருக்குழாய் அமைந்திருக்கவில்லை என்றும் அதனால் எதிரி அதனை உடைத்தாக

சொல்வது வழக்கிறாக பொய்யாக மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும், எனவே எதிரி மீது நீங்கள் பதிவு செய்த முதல்தகவல்அறிக்கை பேரில் செய்யப்பட்ட இறுதிஅறிக்கை ஏற்றுக்கொள்ளதக்க இல்லை என்றால் - சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**